ஸ்ரீ

தோத்திரம்

# திருஆசிரியவிருத்தங்கள்

மூலபாடம்

பொற்களந்தைப்பதி-

முத்தமிழ்க்-

## கவிவீரராகவமுதலியார்

செய்தருளியது.

இஃது

கையெழுத்துப்பிரதிகளில் - பாடந்தோறும் பிழைபடுகின்றதை
நோக்கி - அதைவிலக்கும்பொருட்டு - சென்னைமாநகரத்
துப் பிரபுக்களினும் - புலவர்களினும் - உபாத்தியா
யர்களினும் பலரும் கேட்டுக்கொண்டதால் -
சென்னைக்கல்விச்சங்கத்துத்

தமிழ்ப்புலவர்

## திரு-வேங்கடாசல முதலியாரால்

பல பிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து - பிழைகளைத் திருத்தி -
தமது சரஸ்வதி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இது இவரது தமையனார் குமாரர்

திரு - வீரராகவசாமிமுதலியாரால்

நிறைவேறினது.

சாலிவாகன சகாப்தம் - ததளருகூ - ஜய ஹு.

மாரிசெப

ஹரி

நன்றாக.

துதிகவி.

விரகறிமுத்தமிழ்வீரராகவன் - - - *
வரகவிமாலையைவழுத்துந்தோறெலாம் - *
உரகனும்வாணனுமொக்கக்கூடினுல் - *
சிரகரகம்பிதஞ்செய்யலாகுமே - - *

முதலாவது.

## திருக்கச்சிநகர் -

# பெருந்தேவித்தாயார்பதிகம்.

உலகமொருபதினாலுமுட்கொண்டவண்டங்களுன்கரக்கந்துககுலம் - *
ஒத்தண்டகந்துகத்திரள்வெளிப்படுத்தியுமொளித்தும்விளையாடல்புரியும் *
வலமையைப்பெற்றவொருசித்தனுன்பதியானமாயனவனவரதமுன் *
மழைமதர்க்கண்ணேவுதொழில்செய்யமணியோடுவனமாலையணிமார்பி
சலசதிகர்விழியினுமனத்தினுங்குடிகொண்டுசகலவுயிருந்தழைக்கத் [னும்
தயவுபுரிபெண்சககிரவர்த்திநீயுன்பெருமைசாற்றுதற்கெளிதாகுமோ *
அலர்தலைக்கலியாணகோடிநிலயத்தில்வாழதிககுணபாக்கியவதியே - *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௧)

எத்தனைதரந்துதிக்கினுமஞ்சலிக்கினும்மெண்ணினுந்தயவுசற்றும் - *
இல்லாதிருக்கின்றவன்னெஞ்சுடைத்தேவரிருபொழுதுமபயவரதக் - *
கைத்தலம்விரிப்பரக்கரயுகளமபிநயக்கரமவர்தமைக்கனவினும் - *
கருதேனுனைப்பணியுமடியரடியாரடியர்காலினைவணங்குமடியார் - *
பத்தராமனத்தினினினைப்பவர்தமக்குநிறைபரிவினிகலோகவாழ்வும் - *
பரலோகவாழ்வையுந்தருதெய்வநீயுன்பதத்தையேதொழுவெனம்மே *
அத்திகிரிகரிவரதர்சித்திரமணிமார்பத்திலமரும்வனிதாரத்தினமே - *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௨)

இருள்வருமனத்தரானாலுமுன்சந்நிதியினெதிர்வந்துபணிவாரானால் - *
இந்நிலத்தவருக்குரத்தினபூடணம்வரும்மிலகுபீதாம்பரம்வரும் - *

பொருள்வருந்தானியத்திரள்வருஞ்சுழிபெற்றபுரவியுங்கவிகையும்வரும் *
பொற்சிவிகைவருமதத்தகரிவரும்புவியைப்புரக்கின்றவாண்மைவருமெய்த்
தெருள்வருந்திகழ்பெரும்புகழ்வரும்மட்டமாசித்தியும்வரும்பரத்தில் - *
தேவேந்திரபோகம்வருநான்முகன்பதவியிற்றிருவாழ்வுவருமுண்மைகாண்
அருள்வருகடைக்கணின்பெண்ணமுதமேகச்சியருளாளர்மார்பிலணியே *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௩)

வான்மேவுமமரர்திரள்சொரியுநாண்மலர்படிவருந்திச்செவந்தபதமும் - *
வண்பட்டிணைச்சாத்துகொடியெனநுடங்கியமருங்குலுந்தேவாமிர்தம் - *
தான்மேவுகலசநிகர்முலையுமேகாசமுந்தங்கவளையிடுசெங்கையும் - *
சங்கக்கழுத்துமங்கலநாணும்வேயெனத்தகுதிருத்தோளுமிருசேல் [கும்
மீன்மேவுமொருதாமரைக்குநிகர்நகைமுகமும்வெண்முல்லைமாலைசொரு
மென்குழற்சுருளுமென்கண்காணவந்தெனதுவினைதொலைத்தெனையாளு
ஆன்மேவுபெருமானுமலரோனும்வந்திக்குமற்புதக்கச்சிவாழ்வே [வாய்
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௪)

[டான்
மலைபெற்றமாதுனைப்போல்வளெனமொழிவர்புன்மதிபெற்றமனிதரவ
மற்றுனைப்போலவீறுபெற்றமணவாளனைவளம்பெறுபிறந்தகத்தில் - *
நிலைபெற்றுவாழவைத்தனளோதினந்தினமுநிறைபெற்றவவரைப்பெண்
நீமுழுப்பெண்ணிரந்துண்டசிவன்மனைவியவணிலவுலகும்புரக்கும் - *
தலைபெற்றசோதிமணிமகுடபுருடோத்தமன்றன்மனைவிநீயாதலால் - *
சந்திரவிம்பானனியந்தவுமையுன்னையெத்தன்மையொப்பாள்சொல்லு
அலைபெற்றவேகவதிநதிபெற்றகச்சியிலகம்பெற்றசெல்வமயிலே [வாய்
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௫)

[வும்
மின்னையொத்தெழுபுனற்குமிழியொத்தவனிதனில்விரைவிலழிதனுவும்வாழ்
வெற்பொத்துநில்லாகநிற்குமெனவெண்ணியும்வெறும்பாவமடமாதரைப்
பொன்னையொப்பாரெழுதுசித்திரமொப்பார்நறும்பூவையொப்பாரெ
[னமனம்
புண்படநினைத்துமவமேசெய்துநாள்களைப்போக்கினேன்பிழைபொறுத்தற்
குன்னையொப்பாரில்லைபிழைசெய்வதற்கென்னையொப்பாருமில்லையெனையு
உகந்தெற்றவகையாள்வையோசற்றுமறிகிலேனுன்சித்தமென்பாக்கியம் [ம்
அன்னையொத்துலகாளுமத்திகிரிவரதர்க்கருக்காணியானபொன்னே - *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௬)

இரதியும்பாரதியுமுபயசாமரைவீசவெதிதிரைக்கங்கைமாதும் - - *
இமகிரியணங்குமங்கைளைமேபாடிவிந்திராணிசெந்தாமரைக் - *

# பெருந்தேவித்தாயார்பதிகம்.

கரதலத்தாலடைக்காயுதவவள்ளியுங்கனதவளயானைமகளும் - - *
கர்ப்பூரவாரத்தியேந்தமேனகைரம்பைகயல்விழியுருப்பசியுமே - *
பரதநடமாடவிதிசிவன்வச்சிரபாணிமுப்பத்துமுக்கோடிசுரரும் - *
பலமுனிக்கணமும்புகழ்ந்துகொண்டாடநின்பதிவரதனொடுகச்சியில் - *
அரதனக்கோயிலுறையுன்கொலுவைவர்ணிக்கவரவரசனாலுமாமோ - *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (எ)

ஒளிகொண்டநவமணிச்செம்பொனோலைச்சுருளையுட்கொண்டகாதைத் [தொடும்
ஒண்கடைக்கண்ணிடங்கொண்டவருள்வெள்ளத்திலொருதுளியையென் [மீதிலே
களிகொண்டுசிதறவிடிலுன்பத்தனென்றெனைக்கைக்கொண்டசூலபாசக்
காலனுந்தொடரான்மணங்கொண்டநாண்மலர்க்கணைமதன்றானுமணுகான்
நளிகொண்டபூவிலுறைமகனுமென்சென்னிதனினல்லெழுத்தேயெழு [துவான்
நவக்கோளுமேகாதசத்தானபலனுதவுநகைகொண்டமுகனொடெழுதண்
அளிகொண்டழைத்துநின்பதியத்திகிரிவரதனடிநிழலில்வைப்பனம்மே
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (அ)

பூகத்திலுறைகவிநிமிர்த்தவாலரவெனப்பூவாதவலரிவெருவும் - - *
பொழுதிலப்பரிதிவிடுகிரணம்வார்கோலெனப்புன்கவிக்குலமும்வெருவும்
மாகச்சிவளநகரில்வாரணக்கிரிகோயில்வாழ்தேவராசனொடுநீ - - *
வளர்தமாலத்தருவினைச்சேருமொருகனகவல்லியெனவயிறுநிறைசூல் - *
மேகத்தொடெழுசோதிமின்னெனவெழுந்தருள்விதங்கண்டுபேரின்பமாம்
வெள்ளத்தழுந்துபரிசுத்தமனமண்ணவரின்விண்ணவர்மிகப்பெரியரோ *
ஆகத்தினெழுசக்கிரவாகத்தனத்தினாலசைசிற்றிடைக்கமலையே - - *
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௯)

ஞ்திநிறமேகண்டுநாணிமுகின்மலையேறுமுன்னிணைக்கண்ணேசலால் - *
ஒண்கயலினம்புனல்கிடக்குமுன்முகத்தினுக்கொவ்வாதிருத்தலாலே - *
சோதிமதியுடல்வற்றுமுன்மிடற்றுனலந்தொலைசங்கமின்னமலறும் - *
துணைமுலையினெழில்பெறநிமிர்ந்தவடகனககிரிசுரரைச்சுமந்துநிற்கும் *
சாதிநவரத்தினவளையிடுகரத்தாலுமுன்சரணத்தினாலும்வெட்கித் - *
தாமரைகள்பங்கத்தையடையுமுன்னவயவந்தம்மைவர்ணிக்கவசமோ - *
ஆதிநடுவந்தமுமிலாதபொருளேகச்சியமர்துரைப்பெண்ணேதொழும்
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (௰)

கூடுறைபசுங்கிளிக்குசிதமொழிசொல்லிக்கொடுத்தந்தமொழியச்சுகம் ✻
கூறுகாலையில்வினவிமகிழுமவர்போலவேகோகனகனுதியிமையோர் - ✻
நாடுதற்கரியநீயென்மனத்தாமமாயினுடொறுமிருந்துதமிழ்நூல் - ✻
நலத்தையறிவித்தற்பனுகியவெனைக்கொண்டுநானுவிதக்கவிகளைப் - ✻
பாடுவித்திருசெவிக்கொண்டுரெங்களிகொள்வைபலகாலுமுன்விநோத
பகரவசமோகடவுளன்னமேயென்னமேபரிதியைக்கோபுரதலத் [ம்
தாடுகொடிதொடுகச்சியருளாளர்கண்மணியினகலாதுலாவுபாவாய் - ✻
அடியவர்க்காவியேயதுலசஞ்சீவியேயழகியபெருந்தேவியே - (கக)

✻ முற்றும். ✻

இரண்டாவது.

திருக்கச்சிநகர்-

# வரதராசப்பெருமாள்-
# பஞ்சரத்நிஙங்கள்.

ஆசிரியவிருத்தம். [லம்

வரதவென்றொருதரஞ்சொன்னபேர்புவியையாள்வாருனநுகோயிலைவ
வந்தபேரிந்திரனூரடைவருன்பொன்மயவிமானத்தினைத்தொழுதபேர்
பிரமனுலகினில்வாழ்வர்கரிகிரியிலேறியெம்பெருமநின்னடிபணிந்தோர்
பெருவிரசையக்கரையிலேறியழிவறுமுத்திபெறுகுவரிவைக்கையமோ✻
பரமபுருடாபரமபத்தப்பிரியாபரமபாவனுபரமகருணு - - - ✻
பாங்காவிகங்கரதாங்காமகாசார்ங்கபாணீமிருகாங்கானனு - - ✻
சரணமணிநூபுராருசிரதரகோபுரவிசாலகாஞ்சீபுரேசா - - - ✻
சயதேவராசனேலோசனும்போசனேசதகோடிரவிதேசனே - (க)

அந்தமணிமௌலிபுனைவசுகுலவிமானங்களரச்சுவினிதேவதைகளுநர் - ✻
அற்புதவிமானமளகைத்துரைவிமானம்வந்தனுதினஞ்சூழவவைமேல் ✻
குந்தனப்பொற்சுடரைவிசல்புரியுன்புண்ணியகோடிவிமானமொருகால்
கும்பிடப்பெற்றபேர்முன்செய்வினைகோடானுகோடியோடப்பெறுவ
நந்தனவனத்தினுங்கயல்பொருவனத்தினுநாறுபலமலரிலூறும் [ர்காண்
நனையுண்டுகளிகொண்டுதிரிவண்டுபுடைசென்றுநங்கையர்பதங்கைவதன
சந்தனகுசங்களரவிந்தமென்றலமருந்தண்டமிழ்க்கச்சியோனே [ம்
சயதேவராசனேலோசனும்போசனேசதகோடிரவிதேசனே - (உ)

# வரதராசர்பஞ்சரத்தினங்கள்.

சதுமறையுமறியொணாவொருவன்வந்தான்முத்திதரவல்லதலைவன்வந்தான் *
சகலாண்டநாதன்வந்தானடியர்செய்தபிழைசற்றுமிதயத்திலெண்ணா - *
முதல்வன்வந்தானித்தியவிபவன்வந்தானென்றுன்முன்னூதுவிருதுசின்னம் *
முச்சகமுமெய்ச்சுமிதைமற்றுமுளதெய்வங்கண்முன்னூதில்வெட்குவார்காண்
மதுரகவிபணிமாறன்வண்பொய்கைபேய்பூதன்மழிசைமன்குலசேகரன் - *
மங்கைநாதன்கோதைபுதுவைவருமுனிபாணன்மண்டங்குடிக்கதிபனும் - *
தநியர்துதிசெயவோதுகவிமாலைபுனையெங்கள்சாமியேகச்சியோனே - *
சயதேவராசனேலோசனும்போசனேசதகோடிரவிதேசனே - - (௩)

பாடுமேவராடுமேவரருமையன்போலவறிபவராரரங்கமென்னும் - - - *
பதியனையர்வந்துநின்றிருவடிவணங்கியிசைபாடியாடித்துதித்து - - *
விடருள்கவென்னுமலெதிபதியையருள்கெனவும்வினவிநன்றென்றருளினாய்
வீறுமனுசனையுதவுநீகௌத்துவமணியைவீசெனினுமீவைகண்டாய் - *
நீடியசெழுந்தாழைநெற்றுமாவினின்மாவினிறைகனிபலாவிற்பலா - *
நேர்பழங்கமுகினிற்கமுகின்முதிர்காய்கதலிநிரையினிற்கதலிபலமும் - *
தாடிமப்பலமுமுருகினில்வீழமந்திபாய்தண்பொழிற்கச்சியோனே - *
சயதேவராசனேலோசனும்போசனேசதகோடிரவிதேசனே - - (௪)

எத்திசையுமிகமெய்ச்சுகுருகாபுரிப்புளியிடத்திலகுமகிழ்மாறனும் - - *
எங்கள்கற்பகநல்குபலகனியெனத்தக்கவீரைந்துநூறுகவியும் - - *
சித்தமகிழ்வைத்தருதல்போலுனக்கலகைநிகர்சிறியனேனதுபுன்சொற்
செய்யுளுமகிழ்ச்சிதருமெவ்விதமெனிற்றினஞ்செவியுணர்வுபெற்றபெரி [யோர்க்
குத்தமகலைத்திரளுணர்ந்தநல்லுணர்வுளோரோதுமொழியுவகையுதவும் *
உன்மத்தர்சொலலுநகையுண்டாகவேயுவகையுதவல்செயுமந்தவிதமே *
சத்தமழைதவழ்காவில்வளர்கிளியுமாழ்வார்தமிழ்ப்பகர்திருக்கச்சியாய் *
சயதேவராசனேலோசனும்போசனேசதகோடிரவிதேசனே - (௫)

* முற்றும். *

## ௨ஆவது. இதுவுமது. வேற்றுமகுடம்.

காலனார்தமர்வந்துகைப்பாசம்வீசவுங்கண்கள்பஞ்சடையவிருகால் - *
கைகளுஞ்செயலின்மைபெறமொழிகள்குழறிடக்கண்டத்துளையடைப்ப
பாலரொடுமனைவிதமரழவுயிர்ப்பொழுகலொழிபருவத்தினுள்ளலமரும் *
பாவியேன்முன்னீலமலைபோலநின்றருட்பார்வைவைத்தெனையாளுவாய்
சாலவிருகூலத்துமுத்தெறிந்தனுதினந்தத்திவருமலைமலிநறுந் - - *
தண்புனற்பொன்னிசூழ்திருவரங்கத்தினுந்தடநெடுங்கடலிடத்தும் - *
ஆலிலையினுந்துயிலுமாயனேகொடியாடுமணிமதிட்கச்சிமூதூர் - *
அருளாளனேபெருந்தேவிமணவாளனேயாடரவினடிதாளனே - (௧)

சூத்திரியசைத்தபடிபாவைநின்றுடுநீசூழ்ந்தபடியுயிரனைத்தும் [ன்றே
தொழில்புரியுநன்மைபுரிசனர்தீமைசெய்தபேர்சொர்க்கநரகடைவரொ
சாத்திரம்விதித்தனையுனக்குத்தரஞ்சொலுஞ்சதுரராருன்னுடைமையாம்
சனனவேலையில்வீழிலார்சொந்தநின்சார்புசாரும்படிக்குவைப்பாய் - *
மாத்திருவயோத்தியெனுமூனதுமூதூரிலேமருவியசராசரமெலாம் - *
வானவருமிச்சித்துமெய்ச்சுபதவியில்வாழவைத்தவருள்விழிமேகமே - *
ஆத்திரள்களிக்கவுலகாத்திரடளிர்க்கவேயன்றாதுகச்சிமாலே - - *
அருளாளனேபெருந்தேவிமணவாளனேயாடரவினடிதாளனே - (உ)

உலகறியவருமலரிபூவலரிசோமனுமுடுத்திவிடுசோமனச்சேய் [பொன்
ஒளிரஞ்சேய்புலவனிரவுழன்றலைபுலவனொண்பொன்மிகவொளியற்ற
இலகுசுடர்வெள்ளிவெண்கலமும்விலையுறுமந்தனென்பவன்புத்திமந்தன்
இருநாகமுந்துத்திநாகமெனவுன்னடியரொண்ணுவர்பயப்படுவரோ - *
திலகமெழுதியசிறியபிறைநுதலொருவனிதைசித்தங்களிக்கவிண்ணில் *
சென்றுபலதேவர்செவிசெவிடுபடவெண்சங்குசெவ்வாயின்வைத்தூதிமு
அலர்மலிதருங்கற்பதருவைக்கொணர்ந்திந்தவவனிநடுகச்சிமாலே [ன்
அருளாளனேபெருந்தேவிமணவாளனேயாடரவினடிதாளனே - (ந)

நீயுலகமுதல்வனெனுமுறைமைகரிராசனுனிகிலவத்துவினுநிற்கும் - *
நிலைமைபிரகலாதனுன்முத்திதரவல்லனெனுநீர்மைகண்டாகர்னுல் - *
மாயைபுரியினுமடியவர்க்கெளியனென்னும்விதமழிசைமுனிவரனுலுநீ
மண்ணுலகுதன்னில்வெளிபண்ணினையுனைத்தொழாமன்பதைகள்பேய்
[களலவோ
சேயரிபடைத்துக்குடங்கையினகன்றிணைச்சேலெனமிளிர்ந்துகுழைமேற்
சென்றடிக்கடிமீளவந்துசெங்குமிழின்மறிசினவேலைவென்றமைக்கண் *
ஆயிழைசுமந்தமுலைமாதர்நடமிடுகோயிலாயிரந்திகழ்கச்சிவாழ் - *
அருளாளனேபெருந்தேவிமணவாளனேயாடரவினடிதாளனே - (ச)

ஒருகாசுமற்றவன்பலதானமும்புரியவுன்னும்விதமென்னமுன்னம் - *
ஒருநன்மைபுரிகிலேனுனதூரிலேயிருந்துன்னடியரொடுபழகவும் - *
வருகாரிமாறனுரைதமிழ்மறைபடிக்கவும்மாசற்றபொருளறியவும் - *
வருதினமுனைத்தொழவுமெண்ணினேனடியேன்மனத்தெண்ணநிறைவே
இருகாதிலிடுமணிக்குழைசிரத்திருமகுடமிருகரத்திகிரிசங்கம் [ற்றுவாய்
இரிருபுயக்கனககேயூரமார்பின்மணியிடைசாத்துபொன்னுடையும் - *
அருகாதசுடர்பரப்பவுமிருண்டிலகுருவினத்தனேகச்சியோனே - *
அருளாளனேபெருந்தேவிமணவாளனேயாடரவினடிதாளனே - (ரு)

* முற்றும். *

## ங. ஆவது. இதுவுமது. வேற்றுமகுடம்.

முன்னமொருசிலையழகின்மாதுமீர்வாளனையமுதகோந்திகுலவேந்தனு
முனைவாளிசுட்டரவில்கரியானகர்ப்பமணிமுடிராசபுத்திரனுமலா [ம்
தன்னநடையுடையபெண்ணாணுமாகத்திருவருட்செய்தசாமிமிகவும் - *
அஞ்ஞானியானவெனையணைநொடியில்விஞ்ஞானியாக்குதலுனக்கருமை
உன்னதபுசாதண்டவுத்தண்டகோதண்டவுக்கிரசமரப்பிரசண்டா [யோ
உற்புல்லதாமரசதளயுகளசமநேத்திரவுசிதசுகுமாரகாத்திரா - - *
கன்னிகாமணிபெருந்தேவிநயனானந்தகரகாஞ்சிபுரநிவாசா - - *
கனகமயவரசிகரநிகரகரிகிரிநிலயகரமுகரதரவரதனே - - - (க)

அண்டர்குலமெத்தனையவைக்கேகநாதனீயசிலவத்துவுநின்பொருள் - *
அப்பொருளிலிவைதருதியென்றிரந்திலெனின்னையடியேனிரத்தலிது
மண்டுதிரையெறிகங்கைவந்தநின்பதகஞ்சமறவாதுசிந்தித்திடும் [கேள்
மதியுதவவேணுமதுதருவையேல்வைகுந்தவாழ்வெலாமெனதுகண்டா
புண்டரீகவசிட்டநாரதசுகாதிமுனிபுங்கவத்தோத்திரபாத்திரா [ய்
புசகேந்திரபணசங்கரங்கநடனாஅங்கபூதரவராதபத்திரா - - - *
கண்டவிடமலினபசுபதிசாபகண்டனாகாகுத்தகுலமண்டனா - - *
கனகமயவரசிகரநிகரகரிகிரிநிலயகரமுகரதரவரதனே - - (உ)

அந்தமதுராபுரியின்மிருகமதபடீரத்தையருளினாளங்கவக்கிரம் - *
அத்தனையுமக்கணநிமிர்த்தனையெனப்புகல்வரவ்விதமுனக்கருமையோ *
இந்தநிலமுதிர்கருங்காலியடிவளைதுண்டமெனவலிதுகோணலாகும் - *
என்மனதுசெம்மையாய்நிற்கும்வகைபுரிவையேலெளியெனற்புதமடை
நந்தகோபகுமாரயதுகுலோத்தமவீரநவநீதசோரதீரா [குவேன்
நாளீகநாபமதுசூதனபுராதனநரகாசுரச்சேதனா - - - - *
கந்தமதசலபத்திரகசராசசீவோபகாரகாஞ்சீவிகாரா - - - - *
கனகமயவரசிகரநிகரகரிகிரிநிலயகரமுகரதரவரதனே - - (ங)

சங்கரனிருத்தலிற்சுத்தமானதுரசதசைலமதில்பரிசுத்தனும் - - *
சம்புவுமகாசுத்தநதியென்றுகங்கைசடைதாங்கினனக்கங்கைநின் - *
பங்கயபதப்பரிசமொருகாலமடைதலிற்பரிசுத்திபெற்றதென்பார் - *
பலகாலுமுன்றாளைமனம்வைத்தபாகவதர்பரிசுத்தமோர்தவசமோ - *
அங்கசகிரீட்சமபீனகுசபாஞ்சாலியபிமானதனரக்ஷகா - - - *
ஆலோலகல்லோலசாலகனகோலாகலாம்போதியோகசயனா - - *
கங்கணவிராசிதகரத்துவந்தமேதினீகாந்தாமனோநாயகா - - *
கனகமயவரசிகரநிகரகரிகிரிநிலயகரமுகரதரவரதனே - - (ச)

அச்சகடுதைத்தலகையாருயிருமுலையுமுண்டன்றுகன்றால்விளவெறிந் *
தப்புள்ளின்வாய்கிழித்தானையைவதைத்திகலியடுமல்லர்தமையழித்துத்
துச்சரிதகஞ்சனைக்கொன்றனேயெனப்புகல்வர்துர்வாரமத்தகித்த - *
துட்டனேனுலகினிற்புரியகாட்டவியுந்துணிக்கின்மிகவிசையுண்டுகாண் - *
மச்சகனகச்சபவராககரசிம்மவாமனனுப்பரசுராமா - - - - *
மனுவம்சராமபலராமமோகனகிருஷ்ணமகனீயதாக்ஷேவஷீர் - *
கச்சளவிசாலநயனத்துவயபெருந்தேவிகாமினிசேவநாதா - - - *
கனகமயவரசிகரநிகரகரிகிரிநிலயகரமுகாதரவரதனே - - - (ரு)

*முற்றும்.*

---

௪ ஆவ்து. இதுவுமது. வேற்றுமகுடம்.

மச்சங்குதித்துமணிமழைதடவிவருவேகவதியாறுநெடுவீதியும் - *
வான்மதியைமுத்தமிடுகோபுரமுமிலகுபொன்மதிலும்படைத்துடையநி
கச்சிநகர்மேவிவாழ்பாகவதர்விரஸ்சைசூழ்கன்னிவைகுந்தபுரியைக் [ன்
காணநினையாரந்தவைகுந்தநித்தியரிக்கச்சிதொழவிச்சிப்பர்காண் - *
நிச்சங்கநிர்ப்பயநிராமயநிரஞ்சனநிராகாரநிர்வியாகுலா - - - *
நிர்த்தொந்தநிரதிசயநித்தியவைபவநிகிலநிகமசந்நுதநிருபமா - *
அச்சுதாநந்திதவகண்டிதவபங்குரவசஞ்சலவனந்தநாமா - - - *
அர்க்கசசிநயனயுகசக்கிரகரதலவரதவத்திகிரிசிகரமணியே - - (க)

பண்டுகண்டாகனன்காகாசுரற்குமருள்பண்ணிணைபணிந்தமையினால் - *
பார்க்கிலோசிலதீயர்தாழ்வினற்சார்வைப்படைத்தமைகுறித்தவைக்கும்
மண்டலத்துதவிசெய்தனைசுகுர்தலேசமறுமாபாவியாகுமெனையாள் - *
வாயென்னின்முன்பெற்றபுகழிலிருமடியாகிவருபுகழையடைவைகண்டா
சண்டதமதம்போளிசம்சஞ்சுமஞ்சுதரசத்கண்டகருடதுரகா [ய்
சத்குணத்தோமமேகச்சியாமசீரங்கதாமசுரசார்வபௌமா - - *
அண்டபரிபூர்ணமணிகுண்டலத்துவயகர்னவாசானுபாகுயுகளா - *
அர்க்கசசிநயனயுகசக்கிரகரதலவரதவத்திகிரிசிகரமணியே - - (உ)

வேகவதிதீரத்தில்வந்தபெருமாள்பிரமன்வேள்விக்குகந்தபெருமாள் - *
வீறியதிருக்கச்சிநம்பியொடுவாசகம்விளம்புபெருமாளவனியில் - *
ஏகராசுரவேட்டையாடுபெருமாணல்லபெண்ணையாளுக்குமெங்கள் - *
பெருமாளெனத்தினமுனைத்துதிநரர்க்குவருபேறச்சுரர்க்குமுளதோ - *
ஏகரசடாரிபரகாலமுகவாரிசதிவாகரபுராரிவிநுதா - - - - *
செகத்காரணசதுர்த்தசபுவனபாரணதிவ்வியதுரசீபூஷிண - - *
ஆகவார்ச்சுனகுத்நீளாசமேதவனிலாத்மசரமப்பிரகதோ - - - *
அர்க்கசசிநயனயுகசக்கிரகரதலவரதவத்திகிரிசிகரமணியே - - (ரு)

தாசானுதாசனும்மவனைத்தலைக்கறிசமைத்திடுகவென்றுசற்றும் - - *
தயவிலாதோதுபரதேவர்மிகநாணவுஞ்சந்நிதியிலாலவட்டம் - - *
வீசோர்திருக்கச்சிநம்பிக்கொராளாகிவேலைசெய்தனையாதலால் - *
வீறியவுனக்காகுமருளாளனெனுநாமம்வேறுதேவர்க்காகுமோ - *
வாசாமகோசரகுணாதிசயகோபாலவரவேணுகானலோலா - - - *
மதனமதனாகுந்தமுகுளரதனாபக்தமானசபவித்திரசதனா - - *
ஆசிவிஷோபமமுராந்தகாசயராவணாசுரானுசபாந்தவா - - *
அர்க்கசசிநயனயுகசக்கிரகரதலவரதவத்திகிரிசிகரமணியே - - (௪)

கனதரங்கத்திருவனந்தசரசாடாதகாயம்வெங்காயநின்னைக் - - *
கங்கைகொண்டாண்மண்டபத்தினிற்கருடன்மிசைகாணாதகண்கள்புண்க
தினமுனைப்பணியாதமுடிகணைமுடிவலஞ்செய்யாதகால்பந்தலிற் [ள்
சேர்காறெழாதகையுலக்கைதுதிபண்ணாதசிலவாய்கள்பிலவாய்கள்காண்
வனசபவவிநுதமனசிசசனககனகனிதவசனசுபநளினவதனா - - *
மாரீசதானவவிநாசபரமாகாசவைகுண்டபுரவரேசா - - - - *
அனுபமமகோச்சவாகேசவாரத்தினமயவாரகாஞ்சீவிகாரா - - *
அர்க்கசசிநயனயுகசக்கிரகரதலவரதவத்திகிரிசிகரமணியே - - (௫)

* முற்றும். *

மூன்றாவது.

# திருவேங்கடத்தான்பதிகம்.

ஸ்ரீ. ஆவது. [லே
உலகுதனின்மழலையஞ்சொற்குழவிகைத்தலத்துண்பதுகொடுத்ததனி
ஒருசிறிதுவளருமக்குழவிபாலிக்கவுமுகந்துடன்கவருமவர்போல் [வே
அலகிலாமானிடர்க்கூழ்முறையின்வாழ்வருளியவர்கள்சிலபொருளுதவ
அப்பொருள்களைத்தினங்கைக்கொள்வதவரிடத்தன்பினாலல்லவோகாண்
சலசலெனவருமருவிமுழவதிரமுதுமந்திதாளத்தர்போலக்கரம் - *
தட்டக்கருங்குயிற்சுரமானதித்திநாதங்கூட்டிவண்டுபாட - - - *
விலகிவில்லுமிழ்மேனிமயிலாடமலரம்பொன்வேங்கைசொரியுரகாசலா
மென்கமலபாதவலர்மேன்மங்கைநாதனேவெயில்பொழிகுழைக்காத
(௧) [னே
கண்மலரையிலகுதன்விழிமலரிலிட்டவிருகாலினொருவிற்படையுடைக் *
கரவேடனுக்குகந்தன்றுதன்பதமுதவுகறைமிடற்றவனுநாண - - *
மண்மலரையுன்சரணமலரிடுகுலாலற்குமாமுத்திவாழ்வருளினாய் - *
வந்தடியரொப்பொருள்கொடுத்தாலுமுன்போலமகிழ்வுறுந்தேவரெவர்
[காண்

தண்மலர்நறுந்தொடையல்சொருகுமரகாடவிச்சவரமங்கையர்செங்கை
தகைகெழுகழங்காகவாடல்புரிநீலமணிசஞ்சரிககுலமென்னவே [யால்
விண்மலர்நறுங்கற்பதருமேல்விழுந்திழியும்வேங்கடாசலநாயகா - *
மென்கமலபாதவலர்மேன்மங்கைநாதனேவெயில்பொழிகுழைக்காத
(௨) [னே

நீதந்தபிரபஞ்சவனமதனுணெறியலாநெறிசென்றுவளர்பாவமா - *
நிகழ்தாவவனல்சுடச்சித்தசகிராதசரநிரைவந்துந்தத்துருவியே - *
நோதந்தலைக்கவும்வேரியங்குழன்மகளிர்நோக்கெனும்படுகுழிவிழ - *
நொந்தங்ஙனேகிடக்கின்றதென்மனயானைநோய்துடைத்தேறிக்கொளாய்
மாதந்தமும்மதக்கறையடித்தழைசெவியின்மத்தமாவிடரகலவே - *
மலைமுழைப்பேழ்வாயிடங்கரடுசுடர்நேமிவல்லனேந்துமென்சாமியே *
வேதந்ததரளம்வான்மீனைப்பழித்திலகும்வேங்கடாசலநாயகா - *
மென்கமலபாதவலர்மேன்மங்கைநாதனேவெயில்பொழிகுழைக்காத
(௩) [னே

வாரியினிடத்தோலமிட்டுவருகடவுணதிவகைபோலவுன்பால்வரும் [திப்
மனிதர்திரள்கோவிந்தமிட்டெழும்பேரோசைமழையொலியவிப்பதன்
பாரிலறிவற்றசனர்செவியினுநுழைந்துரம்பயில்பாவவனமுமவியப் - *
பண்ணுமப்பெயருடையவுன்மகிமையெம்மைப்படைத்தவனுமோதறிவ
கூரியமருப்புடைக்கவயமடியாகியகுடங்கொண்டுசொரிநறியபாற் [னே
கொள்ளையும்பிள்ளைமதியின்கொம்புழைப்பணைக்கொம்பிருல்விண்டுதூர்
வேரியுமலைக்கங்கைசேர்பொன்னியிற்பெருகுவேங்கடாசலநாயகா [வும்
மென்கமலபாதவலர்மேன்மங்கைநாதனேவெயில்பொழிகுழைக்காதனே
(௪)

நீமேவுதிருமலையிலஞ்சாயன்மயிலாடுநிலைகுருடர்காணவருகால் - *
நிரையிம்மெனப்பாடுமிசைசெவிடர்வினவவந்நீர்மைகண்டுமைபுகழ - *
மூமேவுகைப்பொருள்பறித்தோடுநெடியவான்மத்திபின்பங்கோடவே
மண்ணுலகினீலீலைபண்ணுவாய்சாமியுன்மாயையாரறியவல்லார் - *
தீமேவுகண்ணுதற்கடவுளுங்குறுநகைத்திசைமுகமறைக்கிழவனும் - *
திகழும்வளரொளிவச்சிரதரனுமமுதாசனத்தேவர்குலமுந்தொழுதுதாம்
பூமேவுகற்பகக்கொழுவியதடம்பணையின்விரிமலர்சுமந்துமெலியும் - *
மென்கமலபாதவலர்மேன்மங்கைநாதனேவெயில்பொழிகுழைக்காதனே
(௫)

அனவரதமபசாரமேசெயுமிளங்குழவியதனிடத்தாதரவுசெய் - - *
தம்மகவின்மழலைசொல்வினவிமகிழ்ந்தாயர்போலாயிரங்குற்றங்களைத் - *
தினமுமொழியாதுபுரிகொடியேனிடத்தினுந்திருவருட்பார்வைவைத்துச்
செப்புசொல்பொருள்வழுவுதழுவுமென்புன்கவிசெவிக்கொண்டுமகிழ்
[வெய்துவாய்

[பேர்
தனதுதெளிபுனலினைக்கண்டோருமப்புனற்றவழ்கால்படப்பெற்ற
தாருமாநந்தகரமுத்திபெறவைத்துவிடுதண்டுறைக்கோனேரியாய் - *
வினைதைசுதனெதிர்நின்றுதொழவவற்கெந்நாளும்விழியினருள்பொழி
[மேகமே
மென்கமலபாதவலர்மேன்மங்கைநாதனேவெயில்பொழிகுழைக்காத
(ஏ) [னே

☞ *ஒழிந்த கவிகள் அகப்பட இல்லை.*

---

இரண்டாவது-

# பஞ்சரத்தினம்.

நாடுதுதிசெயுமுன்மலைக்கேகவேணுமெனநாடியோரடிவைக்குமுன் - *
நாடுவிட்டோடுமவர்பாதகமனைத்துமுன்னன்மலைப்படியேறினோர் - *
பீடுடையதெய்வதவிமானமேறுவருன்பெருங்கோயிறனில்புக்கபேர் *
பிரமனுலகிற்புகுவருன்னடிதொழப்பெற்றபேர்முத்திபெறுவர்கண்டாய்
நாடகாசிவாபகாரகனகீர்த்திவித்தாரகனகாத்திரிதீரா - - - - *
சகலசகதாதாரதீனசனமந்தாரதர்மரகுகுலவிகாரா - - - - *
ஆடகசிரீடகத்தூரிதிலககலலாடவசுரகுலதரளவிபாடா - - - - *
அமரகுலபயநாசஸ்ரீவேங்கடேசாவனந்தரவிசங்காசனே - - (க)

முசரித்தரங்கத்தைவீசிவருமுனதுபொன்முகரியுமகன்றநெடுவான் - *
முகடுதொடுகுவடுடையவடமலையுமக்கிரியின்முச்சகமுமற்புதமுறும் - *
நிகரினுன்பொற்கோயிலழகையுங்காணிலோநித்தியசூரியர்விரசையும் *
நிரதிசயபரமபதமணிமண்டபத்தையுநினைத்துமீளப்போவரோ - *
மகரகுண்டலகர்ணமகனீயசுரசமயவசனகனநீலவர்ண - - - - *
வனமாலிகாபரணவரவிபீஷணசரணமஞ்சுமஞ்சீரசரண - - - *
அகிலலோகாதீதபஞ்சபாண்டவதூதவகணிதமகாவிநோதா - - *
அமரகுலபயநாசஸ்ரீவேங்கடேசாவனந்தரவிசங்காசனே - - (உ)

தெண்டிரையையெறிகங்கைமுதலானபுண்ணியநதிதீரத்தினுலுமறையும்
தினமோதுநாவுமதிசயவேள்விநூறும்விதிசெய்தகையிணையாகுநாள் *
முண்டகமுமுரைவிப்பிரனுகிவாழ்தலினுனதுமுதியகிரியிற்கிருமியாய் - *
முளைத்தெழும்புல்லாயிருத்தலேநன்றெளிதின்முத்திபெறலாமுண்மை
புண்டரிகலோசனபவநாசனவிதுரபோசனகருடாசன [காண்
புருகூதவந்தனகனசிந்துபந்தனபுண்ணியதேவகிநந்தன - - *
அண்டகவரேக்கிராசதாருசம்பரநாசவாநந்தநிலயவாசா - - - *
அமரகுலபயநாசஸ்ரீவேங்கடேசாவனந்தரவிசங்காசனே - - (ங)

கமலமகண்மார்பினிலடங்கவிதியுந்தியங்கஞ்சப்பொகுட்டடங்கக் - *
கடல்சுற்றுமண்ணுலகும்விண்ணுலகுமுன்னிணைக்காலினுளடங்கவண்டம்
விமலமாமுதரத்தடங்கப்படைத்தநீவீறுதேவகிவயிற்றும் - - *
மெய்யடியர்நெஞ்சினுமடங்கிநின்றனையுன்விநோதத்தையோதவச
சமரசிததூஷிணுமிருதுபாஷிணுருசிரதரகௌத்துவபூஷிண [மோ
சத்தியசாரித்திரவசுதேவவரபுத்திரவதிதர்மயதுகுலபவித்திரா - - *
அமிதகருணகராலலிதகுணசாகராவகிலதானவபீகரா - - - *
அமரகுலபயநாசஸ்ரீவேங்கடேசாவனந்தரவிசங்காசனே - - (ச)

காகாசுரற்குமருள்செய்தகண்மலருமொருகல்லினுக்குதவிபுரிதாட். - *
கடிமலருமலகைமுலைபொழிகரளமங்கீகரித்தவாய்மலருநெடுவான் - *
மேகாடவிச்சிலாவருடந்தவிர்க்கமுரண்வெற்பைச்சுமந்தகரமாம் - *
மென்மலருமுடையநீபொல்லாதவெனையாளரல்விகிதமேயினியாட்கொ
நாகாரிவாகனகனசகனமோகனநானகவனதாகன [ள்வாய்
நந்தகுலபரிபாலசங்கீதலோலவபிநவகனகமயதுகூலா - - - *
ஆகாசசந்நிபாகாரவதுவிதவீரவகிலலோகோபகாரா - - - *
அமரகுலபயநாசஸ்ரீவேங்கடேசாவனந்தரவிசங்காசனே - - (ரு)

❋ முற்றும். ❋

இதனுடு கூடப் பதிப்பித்துவிற்கப்படுகின்ற பிரபந்தங்கள்.

திருவேங்கடமாலை
திருவேங்கடத்தந்தாதி
திருவரங்கத்துமாலை
திருவரங்கத்தந்தாதி
திருவரங்கக்கலம்பகம்
திருவரங்கத்தூசல்
அழகரந்தாதி
௸ - திருப்பதியந்தாதி
வடவேங்கடநாராயணசதகம்
திருவேங்கடக்கலம்பகம்
திருக்கண்ணமங்கைமாலை

இனிப்பதிப்பிக்கப்படும்பிரபந்தங்கள்.

சடகோபரந்தாதி
எம்பிரான்சதகம்
நெஞ்சுவிடுதூது
திருவேங்கடத்துலா
அழகர்பிள்ளைத்தமிழ்
வைகுந்தநாதர்பிள்ளைத்தமிழ்
௸ - திருப்பதிக்கோவை
௸ - திருப்பதித்திருப்புகழ்
இராமசெயத்திருப்புகழ்
கிஷ்ணசெயத்திருப்புகழ்
திருவேங்கடவருக்கைமாலை
அடைக்கலப்பாமாலை
இரட்டைமணிமாலைகள்
முத்தகப்பாமாலை
திருவரங்கப்பதிற்றுப்பத்தந்தாதி
அனுமாரனுபூதி.